# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3323/B/2019**

திரு. M. சம்பத் முத்துகுமார் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஊராட்சி ஒன்றியம்,
குன்னூர். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர், திரு.சம்பத் முத்துகுமார் மற்றும் பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், நீலகிரி மாவட்டம் அவர்கள் விசாரணையில் கலந்து கொண்டார்கள்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன் கீழ் அளிக்கப்பட்ட தனது மனுவில் நிலவகை மாற்றம் பற்றியும் மெட் கரன்சி மற்றும் டிரம்லா எஸ்டேட்டின் கட்டுமான அனுமதி பற்றியும் 10 இனங்களில் தகவல் கோரி, பொது தகவல் அலுவலர், எடப்பள்ளி கிராம பஞ்சாயத்து, குன்னூர் ஊராட்சி ஒன்றியம், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல் எதுவும் பெறப்படாத நிலையில், 21.1.2019 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் பதில் எதுவும் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், 9.4.2019 தேதியிட்டு, இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த மனுவின் மீது இன்று விசாரணை நடைபெற்றது.

4. இன்றைய விசாரணையின்போது, மனுதாரருக்கு தகவல் வழங்கப்படவில்லை என்று ஆணையம் கருதி, பொது தகவல் அலுவலர் ஐந்து நாட்களுக்குள் மனுதாரருக்கு உரிய தகவலை அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. மனுதாரர் இது வரை தகவல் வழங்காத பொது தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

5. பொது தகவல் அலுவலர், 9.11.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு அவர் கோரிய தகவலை அளித்துள்ளார் என்பதை இவ்வாணையம் ஏற்றுக் கொள்கிறது. இருப்பினும், தகவல் தராத பொது தகவல் அலுவலர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுதாரர் தெரிவித்துள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது. எனவே, இவ்வழக்கின் முடிவில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு, இந்த இரண்டாம் முறையீட்டு மனு மீதான விசாரணை முடித்து வைக்கப்படுகிறது:-

**தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 7(1)ல் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி 30 தினங்களுக்குள் முழுமையான தகவல்களை வழங்காத, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன் கீழ் பெற்றுக் கொண்ட அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)ன் கீழ் அதிகப்பட்ச தண்டத் தொகையாக ரூபாய் 25,000/- அபராதம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினையும் மற்றும் அனைத்து தகவல்களையும் வழங்க மறுப்பு செய்ததற்காக பிரிவு 20(2)ன் கீழ் ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அவரது உயர் அதிகாரிக்கு பரிந்துரை செய்யக் கூடாது என்பதற்கான விளக்கத்தினையும், இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 மாத காலத்திற்குள் தற்போதைய பொது தகவல் அலுவலர், இவ்வாணையத்திற்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கும்படி பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA/3323/B/2019</u>**

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
குன்னூர் ஊராட்சி ஒன்றியம்,
நீலகிரி மாவட்டம்.

மனுதாரர்
திரு. M. சம்பத் முத்துகுமார்,
313, SR வழக்கறிஞர்கள் காம்ப்ளக்ஸ், 3வது தெரு,
கோபாலபுரம், கோயம்புத்தூர் - 641 018.
அலைபேசி - 7339 444 163, 944 210 6876.

Copy to: File
SS/PA 18/11/2020